**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 09.01.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Umaesh Pandiyan (PW 3) | வயது | 40 |
| தந்தை பெயர் | Chinnasamy | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali, Channi | | |

எதிரி 2 மற்றும் 4 ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் சோலை அரசு மருத்துவமனையின் அருகே பழக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் 2 மற்றும் 4 எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.08.2021 அன்று பகல் சுமார் 3 முதல் 3.30 மணியளவில் என்எஸ்கே தெருவிலுள்ள எனது அண்ணன் ஜெயராஜ் என்பவருக்கு சொந்தமான காலி மனையை நானும் எனது மைத்துனா் அசா2 ஜெயகணேஷ் என்பவரும் பார்த்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகளும் மற்றும் 2 நபர்களும் அவர்கள் பெயர்கள் எனக்கு நினைவில் இல்லை) அங்கு வந்து ஆஜர் 2ஆம் எதிரியை அடையாளம் காட்டி தேவிடியா பையா நீங்கள் யார் எதற்காக பார்க்க வந்தீா்கள் என்று தகாத வார்த்தையில் பேசினார். நாங்கள் இடத்தை பார்க்க வந்தோம் என கூறினோம். அந்த சமயத்தில் ஆஜர் 2 மற்றும் 4 எதிரிகள் கைகளால் என்னையும் எனது மைத்துனர் அசா2 யையும் தாக்கினர். பின்பு ஆஜர் எதிரிகள் மற்றும் சிறு வயதுடைய ஒரு நபர் அருகே அடுக்கி வைத்திருந்த கண்ணாடியால் எனது தலையில் தாக்கினார்கள். பின்பு உடைந்த கண்ணாடி துண்டு ஒன்றைக் கொண்டு அவர்களில் சிறுவயதுடைய ஒரு நபர் என்னை வயிற்றுப் பகுதியில் குத்தினார். எதிரிகள் என்னை தாக்கியதால் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. நான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது நான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இருந்தேன். மருத்துவமனைக்கு என்னை எனது அண்ணன் ஜெயராஜ் அழைத்து வந்ததாக எனக்கு தெரியவந்தது.

3வது எதிரி ஆஜரில்லாததால் சாட்சியால் அடையாளம் காணப்பட முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.